காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரிக்கு

# ஹூண்டாய் நிறுவனம் கார் பரிசு




ஹூண்டாய் நிறுவன முதன்மை துணைத் தலைவர் ஸ்டீபன்சுதாகர் மற்றும் துறைத்தலைவர் ஸ்ரீதர் முன்னிலையில், காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரி முதல்வர் எம்.எம்.ரவிக்குமார் காரின் சாவியை பெற்றுக் கொண்டார்.

**வேலூர், ஜூலை 3:** காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரி மாணவர்களுடைய திறன் வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாடுக்களை மேலும் ஊக்குவிக்கும் விதமாகவும் கல்லூரி தலைவர் கதிர்ஆனந்த்கல்விச் சேவை மற்றும் பொறியியல் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதத்தில் ஹூண்டாய் நிறுவனம் கிரிட்டா (எஸ்யுவி) வகை கார் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியது.

இந்த காரை பயன்படுத்தி மாணவர்கள் தங்களுடைய தொழில்நுட்ப அறிவு, ஆராய்ச்சி முறை பயிற்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க ஏதுவாக அமைந்துள்ளது.

தொடர்ந்து, ஹூண்டாய் நிறுவன முதன்மை துணைத்தலைவர் ஸ்டீபன் சுதாகர் மற்றும் துறைத்தலைவர் ஸ்ரீதர் முன்னிலையில் கல்லூரி முதல்வர் எம். எம். ரவிக்குமார் காரின் சாவியை பெற்றுக் கொண்டார்.

அப்போது வேலை வாய்ப்பு துறை தலைவர் எஸ்.திங்கள்செல்வன், இயந்திரவியல் துறை தலைவர் மகேந்திரன் ஆகியோர் இருந்தனர்.


தினகரன்
Wed, 03 July 2019
https://epaper.dinakaran.com/c/40996935